# மீட்டற் பயிற்சி - 4

வாரம் 36

**1** கமலா காட்டும் அட்டையில் மூன்று இலக்கங்கள் உள்ளன. அவற்றைக் கொண்டு




(1) ஆக்கக் கூடிய 100 இலும் பெரிய மூன்று எண்களை எழுதுங்கள்.

(2) அவ்வெண்களை ஏறுவரிசையில் எழுதுங்கள்.

**2** பிரதி செய்து, ஒவ்வொரு கோலத்திலும் அடுத்ததாக வர வேண்டிய எண்ணை எழுதுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | 2 | 5 | 8 | 11 |
| (2) | 15 | 12 | 9 | 6 |
| (3) | 13 | 11 | 9 | 7 |
| (4) | 32 | 28 | 24 | 20 |
| (5) | 5 | 10 | 15 | 20 |
| (6) | 36 | 30 | 24 | 18 |
| (7) | 49 | 42 | 35 | 28 |
| (8) | 16 | 24 | 32 | 40 |
| (9) | 11 | 21 | 31 | 41 |
| (10) | 50 | 40 | 30 | 20 |



**3** பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

(1) இரண்டுகள் எட்டு எத்தனை?

(2) மூன்று தடவை மூன்று எத்தனை?

(3) பன்னிரண்டு தடவை நான்கு எத்தனை?

(4) 25 இல் எத்தனை ஐந்துகள் உள்ளன?

(5) பத்துக்கள் எட்டு எத்தனை?

(6) இரண்டு தடவை ஆறு எத்தனை?

(7) ஏழுகள் ஒன்பது எத்தனை?

(8) எட்டுக்கள் எட்டு எத்தனை?

(9) பத்து தடவை ஒன்பது எத்தனை?

(10) 90 எத்தனை ஒன்பதுகள் ஆகும்?



# மீட்டற் பயிற்சி - 4

**4** அட்டையில் உள்ள எண்களுள் எந்த இரண்டு எண்களைக் கூட்டினால் இவ் விடைகள் கிடைக்கும்?





விடைகள்
(1) 996
(2) 528
(3) 539
(4) 649
(4) 985

**5** வாக்கியங்கள் எழுதி விடையளியுங்கள்.

(1) ஒரு பரீட்சைக்கு 998 பேர் தோற்றினர். அவர்களுள் 489 பேர் பெண்கள் எனின் ஆண்கள் எத்தனை பேர்?

(2) ஒரு குவியலில் 877 தேங்காய்கள் இருந்தன. அவற்றுள் 487 தேங்காய்கள் விற்கப்பட்டன. மீதியாக உள்ள தேங்காய்கள் எத்தனை?

**6** தரப்பட்டுள்ள படங்களைப் பார்த்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.




(1) $\frac{1}{2}$ நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுங்கள்.

(2) $\frac{1}{4}$ நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுங்கள்.

(3) $\frac{1}{3}$ நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுங்கள்.

(4) $\frac{2}{5}$ நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுங்கள்.

(5) $\frac{7}{10}$ நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுங்கள்.



# மீட்டற் பயிற்சி - 4

**7** பின்வரும் பயிற்சிகளுக்கு விடை அளியுங்கள்.

(1) 4 m 25 cm ஐ சென்ரிமீற்றரில் எழுதுங்கள்.


(2) 54 m 32 cm ஐ சென்ரிமீற்றரில் எழுதுங்கள்.

(3) 496 cm ஐ மீற்றரிலும் சென்ரிமீற்றரில் எழுதுங்கள்.

(4) 818 cm ஐ மீற்றரிலும் சென்ரிமீற்றரில் எழுதுங்கள்.

**8** வரைபைப் பார்த்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.







(1) காகங்கள் எத்தனை?

(2) மைனாக்கள் எத்தனை?

(3) கொக்குகளை விட எத்தனை மைனாக்கள் கூடுதலாக உள்ளன?

(4) தோட்டத்துக்கு வந்த பறவைகளின் மொத்த தொகை எவ்வளவு?



# மீட்டற் பயிற்சி - 4

**9** பிரதி செய்து இடைவெளி நிரப்புங்கள்.



(1) இரண்டு, 500 g ....... kg ஆகும்.
(2) ......., 250 g 1 kg ஆகும்.
(3) நூறு, 10 g ....... kg ஆகும்.
(4) இருபது, 50 g ....... kg ஆகும்.

**10** பிரதி செய்து விடை அளியுங்கள்.

(1) 10 இல் எத்தனை இரண்டுகள் உள்ளன?
(2) எத்தனை இரண்டுகள் 18 ஆகும்?
(3) 15ஐ இரண்டால் வகுத்தால் 7 உடன் மீதியாக கிடைப்பது எவ்வளவு?
(4) 21.இனிப்புக்கள் மூன்று பேர்களிடையே சமமாகப் பங்கிடப்பட்டன. ஒருவருக்குக் கிடைத்த இனிப்புகள் எத்தனை?
(5) 20 மாம்பழங்கள் நான்கு பேர்களுக்கிடையே சமமாகப் பகிரப்பட்டன. ஒருவருக்கு கிடைத்த மாம்பழங்கள் எத்தனை?
(6) 30 ஐக் கொண்ட குவியலை ஆக்குவதற்கு 3 இன் குவியல்கள் எத்தனை தேவை?
(7) 32 இன் குவியலை எத்தனை 4 இன் குவியல்களாக வகுக்கலாம்?
(8) 40 நாவல் பழங்களைக் கொண்ட ஒரு குவியல் 5 பேரிடையே சமமாகப் பகிரப்பட்டது. ஒருவருக்குக் கிடைத்த நாவல் பழங்கள் எத்தனை?

**11** பின்வரும் மில்லிலீற்றர் அளவுகளை லீற்றரிலும் மில்லிலீற்றரிலும் எழுதுங்கள்.



(1) 2 550 *ml*
(2) 3 500 *ml*
(3) 4 293 *ml*
(4) 5 950 *ml*

**12** பின்வரும் லீற்றர், மில்லிலீற்றர் அளவுகளை மில்லிலீற்றரில் எழுதுங்கள்.



(1) 2 *l* 990 *ml* = ..................*ml*
(2) 3 *l* 720 *ml* = ..................*ml*
(3) 4 *l* 391 *ml* = ..................*ml*
(4) 5 *l* 777 *ml* = ..................*ml*

# மீட்டற் பயிற்சி - 4

**13** பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படி எழுதுங்கள்.

8 006,   887,   2 489,   5 068



**14** பின்வரும் எண்களை இறங்கு வரிசைப்படி எழுதுங்கள்.


2 099,   897,   3 909,   7 001

**15** பிரதி செய்து பெருக்குங்கள்.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8 | 6 | 13 | 25 |
| X 2 | X 3 | X 4 | X 5 |



**16** பின்வரும் முக்கோணிகளுள் செங்கோணமுடைய முக்கோணிகளைத் தெரிவு செய்து அவற்றின் எண்களை எழுதுங்கள்.






# மீட்டற் பயிற்சி - 4

**வாரம் 36**

## 17 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

(1) இன்று திங்கட்கிழமையானால் நாளை என்ன கிழமை?

(2) இன்று திங்கட்கிழமையானால் நாளை மறுநாள் என்ன கிழமை?

(3) ஞாயிற்றுக்கிழமையின் பின்னர் வரும் நாள் எது?

(4) வருடத்தின் முதல் மாதத்தின் பெயரை எழுதுங்கள்?

(5) வருடத்தின் கடைசி மாதத்தின் பெயரை எழுதுங்கள்?

(6) தமிழ் – சிங்கள புத்தாண்டு இடம்பெறும் மாதத்தின் பெயரை எழுதுங்கள்?

(7) நத்தார் இடம் பெறும் மாதம் எது?

(8) மே மாதத்தின் பின்னர் வரும் மாதம் எது?

(9) மிகக் குறைவான நாட்களைக் கொண்ட மாதம் எது?

(10) நேற்று புதன்கிழமை எனின் நாளை என்ன நாள்?



## 18 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

(1) ரூபாய் இரண்டிற்கு எத்தனை 50 சத நாணயங்கள் தேவை?

(2) ரூபாய் பத்தைச் செலுத்தக் கூடிய 3 முறைகளை எழுதுங்கள்.

(3) லகிரு ரூபாய் இருபத்தைந்திற்கு ஒரு பயிற்சிப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு இரண்டு தாள்காசுகளையும் மூன்று நாணயங்களையும் கொடுத்தான். அவன் கொடுத்த தாள்காசுகளும் நாணயங்களும் எவை?

(4) பின்வரும் தாள்காசுகளை மாற்றக்கூடிய இரண்டு முறைகள் வீதம் எழுதுங்கள்.
ரூபாய் 100 ரூபாய் 500

(5) இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படும் ரூபாய் 5000 வரையிலான தாள்காசுகள் யாவை?

## 19 பின்வரும் பயிற்சிகளைப் பிரதி செய்து விடை அளியுங்கள்.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 213 | 200 | 709 | 748 |
| 427 | 634 | 106 | 210 |
| + 402 | + 109 | + 408 | + 237 |
| ____ | ____ | ____ | ____ |



**20** 4 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் தொகைகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளியுங்கள்.



| பாடசாலை | மாணவர் தொகை |
|---|---|
| வித்தியா பாடசாலை | 589 |
| கெமுனு பாடசாலை | 692 |
| தேவி பாடசாலை | 607 |
| குமாரி பாடசாலை | 475 |

(1) மிகக் கூடுதலான மாணவர்களும் மிகக் குறைவான மாணவர்களும் உள்ள இரு பாடசாலைகளின் மாணவர் தொகைகளுக்கு இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

(2) கெமுனு பாடசாலை மாணவர் தொகைக்கும் தேவி பாடசாலை மாணவர் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

(3) வித்தியா பாடசாலை மாணவர் தொகை, குமாரி பாடசாலையின் மாணவர் தொகையை விட எவ்வளவு கூடுதலானது?

**21** உங்கள் வகுப்பில் (1) ஆசிரியர் மேசையின் மீதும் (2) மாணவர் மேசை மீதும் சமனான அளவுடைய புத்தகங்களைப் பரப்பி மேற்றளங்களின் பரப்பளவைக் காணுங்கள். பின்வரும் கூற்றுக்களைப் பிரதி செய்து இடைவெளி நிரப்புங்கள்.

(1) ஆசிரியர் மேசையின் மேற்றளத்தின் பரப்பளவு ..... பயிற்சிப் புத்தகங்கள்.

(2) மாணவர் மேசையின் மேற்றளத்தின் பரப்பளவு ...... பயிற்சிப் புத்தகங்கள்.



**22** பிரதி செய்து வகுங்கள்.

(1) 2 | 226 (2) 3 | 129 (3) 4 | 486 (4) 5 | 450

# மீட்டற் பயிற்சி - 4

**23** ஒரு வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் பாடசாலைக்கு வருகை தரும் விதத்தைக் காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. இத்தகவல்களைக் காட்டுவதற்கு நிரல் வரைபு வரையுங்கள்.

| பாடசாலைக்கு வரும் விதம் | மாணவர் தொகை |
|---|---|
| பேரூந்தில் | 6 |
| நடந்து | 10 |
| சைக்கிளில் | 4 |
| புகையிரதத்தில் | 8 |



வரைபில் இருந்து பெறக்கூடிய தகவல்கள் மூலம் 3 வாக்கியங்கள் எழுதுங்கள்.

**24** பின்வரும் விலைப்பட்டியலைப் பார்த்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

விலைப்பட்டியல்

| | | |
|---|---|---|
| பால் மாப் பைக்கற்று ஒன்று | ரூபாய் | 275.00 |
| சீனி 1kg | ரூபாய் | 70.00 |
| பருப்பு 1kg | ரூபாய் | 120.00 |
| சவர்க்காரக் கட்டி ஒன்று | ரூபாய் | 22.00 |
| தேயிலை 1kg | ரூபாய் | 350.00 |
| அரிசி 1kg | ரூபாய் | 75.50 |



(1) அம்மா 1 kg பருப்பும் 2 kg சீனியும் வாங்கினார். அவர் செலுத்திய பணம் எவ்வளவு?

(2) கமலா சவர்க்காரக் கட்டி ஒன்றும், பால்மாப் பைக்கற்று ஒன்றும் 500g பருப்பும் வாங்கிக் கொண்டு ரூபாய் 500.00 ஐக் கொடுத்தாள். அவளுக்கு மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

**25** உரோமன் எண்குறிகளில் எழுதுங்கள்.

(1) ஆறு (2) எட்டு (3) பத்து (4) ஐந்து (5) ஒன்பது



# மீட்டற் பயிற்சி - 4

வாரம் 36

**26** பிரதி செய்து கூட்டுங்கள்.

(1)

| kg | g |
|---|---|
| 7 | 400 |
| + 4 | 750 |
| | |

(2)

| kg | g |
|---|---|
| 2 | 200 |
| + 3 | 800 |
| | |

(3)

| kg | g |
|---|---|
| 9 | 500 |
| + 4 | 750 |
| | |



**27** பிரதி செய்து கழியுங்கள்.

(1)

| kg | g |
|---|---|
| 4 | 100 |
| - 2 | 900 |
| | |


(2)

| kg | g |
|---|---|
| 10 | 200 |
| - 5 | 500 |
| | |

(3)

| kg | g |
|---|---|
| 12 | 000 |
| - 3 | 500 |
| | |

**28** பின்வரும் படத்தைப் பார்த்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.




(1) வகுப்பறையில் இருந்து அலுவலகத்தின் ஊடாக நுழைவாயில் வரையிலான தூரம் எவ்வளவு?

(2) நுழைவாயிலில் இருந்து அலுவலகம் வரையிலான தூரத்துக்கும் வகுப்பறையில் இருந்து அலுவலகம் வரையிலான தூரத்துக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

# மீட்டற் பயிற்சி - 4

**29** ஒரு வாளியில் 4 *l* 850 *ml* நீர் இருந்தது.
அந்த வாளியில் மேலும் 6 *l* 200 *ml* நீர் சேர்க்கப்பட்டது.
இப்போது வாளியில் உள்ள நீரின் மொத்த அளவு யாது?

**30** ஒரு பாத்திரத்தில் 2 *l* 500 *ml* வர்ணப்பூச்சு உள்ளது.
அதிலிருந்து 750 *ml* சுவரில் பூசப்பட்டது.
மீதியாக உள்ள வர்ணப்பூச்சின் அளவு யாது?

**31** பெருக்குங்கள்.

(1)
$$\begin{array}{r} 10 \\ \times \quad 7 \\ \hline \\ \hline \end{array}$$

(2)
$$\begin{array}{r} 13 \\ \times \quad 8 \\ \hline \\ \hline \end{array}$$

(3)
$$\begin{array}{r} 14 \\ \times \quad 9 \\ \hline \\ \hline \end{array}$$

(4)
$$\begin{array}{r} 12 \\ \times \quad 10 \\ \hline \\ \hline \end{array}$$

**32** ஒவ்வொரு உருக் கோலத்தையும் பிரதி செய்யுங்கள். அடுத்ததாக வரவேண்டிய உருவை வரையுங்கள்.

(1) 

(2) 

(3) 

(4) 



**33** வகுங்கள்.

(1) $2\overline{)128}$ (2) $3\overline{)183}$ (3) $4\overline{)846}$ (4) $5\overline{)159}$



